[1992 பிப்ரவரி 10

117—

சாயல்குடியில் கால்நடை மருந்தகம்.

*வினா எண் 5209—திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி பேரூராட்சியில் கால்நடை மருந்தகம் ஒன்று துவங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயல்குடியில் ஒரு கால்நடை மருந்தகம் துவக்க வேண்டும் என்றும், அந்த சாயல்குடியை உள்ளடக்கிய கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் இதற்கான தீர்மானம் வேண்டும் என்றும் கடந்த 7, 8 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் தீர்மானம் போட்டு, கால்நடை இயக்குநர் மூலம் அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டு வருகிறது. சாயல்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமையக்கூடிய ஒரு சூழ்நிலையும் தற்போது உருவாகியுள்ளது. சுமார் 20 லிருந்து 25 ஊராட்சிகளுக்குட்பட்ட கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கு வேறு இடம் இல்லை. ஆகவே, சாயல்குடியில் கால தாமதம் இன்றி ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன் வர வேண்டும். அதற்கான கோப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுப் பெறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி கிராமத்தில் மருந்தகம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் மண்டல இணை இயக்குநர் மூலம் கேட்கப்பட்டுள்ளது. அது வந்தவுடன் அது நிபந்தனைகளுக்கு உட்பட்டிருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 118— திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.